மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 05 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.03/19
அ.வ.எண்.52/2016

1. பிரபாகரன்
2. சண்முகராஜ்
3. கனகராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சந்தானலட்சுமி
2. நாகேந்திரன்
3. பழனிசாமி
4. கேசவன்
5. அய்யப்பன் ... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 ம்பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 25.09.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த இவ்வழக்கில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) 1 ம்மனுதாரர் ஒரு மனையிடத்தை நஞ்சப்ப செட்டியாரின் மகன்களிடமிருந்து 30.10.1996 ம் தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலம் கிரயம் பெற்றார். அதில் தார்சு வீடு கட்டியுள்ளார். அதன் கதவுஎண்.15–2–28/1.

(ii) 2 ம்மனுதாரர் ஒரு மனையிடத்தை கிருஷ்ணசெட்டியார் மற்றும் ஜே.யூ.ராமலிங்கம் ஆகியோரிடமிருந்து 16.06.1988 ல் தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலம் கிரயம் பெற்றார். அதில் தார்சு வீடு கட்டியுள்ளார். அதன் கதவுஎண்.15–2–22.

(iii) 3ம்மனுதாரர் ஒரு மனையிடத்தை யுவராஜ் என்பவரிடமிருந்து 22.09.2004ம் தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலம் கிரயம் பெற்றார். அதில் தார்சு வீடு கட்டியுள்ளார். அதன் கதவுஎண்.15-2-21.

(iv) மனுதாரர்களின் வீடுகள் ஆவடத்துார் கிராமம், சர்வே எண்கள். 226/8, 266/6, 266/2ல் உள்ளது. மனுதாரர்கள் அவரவர்கள் வீட்டில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள். வழக்கு சொத்தான 20 அடி ரோடு மனுதாரர்களின் கிரயப்பத்திரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாராகளும், மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவர்களும் மேற்படி ரோட்டை அனுபவித்து வந்தனர். மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவர்கள் 03.01.2008ல் 6ம் பிரதிவாதியான ஜலகண்டாபுரம் டவுன் பஞ்சாயத்திற்கு மேற்படி ரோட்டை பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் எழுதி கொடுத்து ஒப்படைத்துவிட்டனர். 6ம்பிரதிவாதி மேற்படி ரோட்டை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து பராமரித்து வருகிறார். பொதுமக்களும் மேற்படி ரோட்டை பயன்படுத்தி வருகின்றனர்.

(v) எதிர்மனுதாரர்கள் நாகமாணிக்கம் என்பவரின் வாரிசுகள் ஆவர். அவர்களுக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும், உரிமைமூலமும் இல்லை. இந்நிலையில் கடந்த 14.02.2016ல் எதிர்மனுதாரர்களையும், அந்த பகுதி மக்களையும் தடுப்பதற்காக ரோட்டிற்கு குறுக்கே வேலி அமைத்துவிட்டார்கள். மனுதாரர்கள் மேற்படி சட்டத்திற்கு புறம்பான செயலை 6ம்பிரதிவாதியின் உதவியுடன் நீக்கிவிட்டனர். மேலும் 08.01.2019ல் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ரவுடிகளுடன் சேர்ந்து கொண்டு மனுதாரர்களையும், அந்த பகுதியில் உள்ளவர்களையும் வழக்கு ரோட்டை பயன்படுத்த -விடாமல் ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் குழியை தோண்டினர். மனுதாரர்கள் அதனை தடுத்து, உள்ளூர் காவலர்கள் உதவியுடன் அதனை மூடிவிட்டனர். இந்நிலையில் மீண்டும் 17.07.2019ல் எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்தனர். எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 2ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1,3 முதல் 5 ம்எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) 1ம்மனுதாரர் 30.06.1996 ம் தேதியிட்ட கிரய பத்திரம் மூலம் மனையிடத்தை கிரயம் பெற்றார் என்பதும், அதில் தார்சு வீடு கட்டியுள்ளார் என்பதும், அதன் கதவுஎண்.15–2–28/1 என்பதும் பொய்யாகும். மனு பத்தி 4 மற்றும் 5ல் கூறியுள்ள சங்கதிகள் பொய்யாகும். மனுதாரர்கள் பெயரிலுள்ள கிரய பத்திரமும், அவர்களது முன்னவர்களின் பெயரிலுள்ள கிரய பத்திரமும் போர்ஜரியானதாகும். மனுதாரர்களின் வீடுகள் சர்வே எண்கள்.226/2, 226/6, 226/8 ஆகியவற்றில் உள்ளது என கூறுவது பொய்யாகும். வழக்கு சொத்து ரோடு என்பதும், அதுகுறித்து கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் பொய்யாகும். மனுதாரர்களும், அவர்களுக்கு விற்பனை செய்தவர்களும் மேற்படி ரோட்டை அனுபவித்து வந்தார்கள் என கூறுவது பொய்யாகும். அந்த ரோட்டை 6ம்பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்து ஒப்படைத்து விட்டதாகவும், அது அவர்களது பராமரிப்பில் இருந்து வருவதாகவும் கூறுவது பொய்யாகும். மனுதாரர்களுக்கு விற்பனை செய்த ஜே.யூ.ராமலிங்கம் மற்றும் கே.வி.நஞ்சப்ப செட்டியாரின் மகன்களுக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. எவ்வித உரிமையும் இல்லாமல் போலியான பத்திரங்களை உருவாக்கி அதன் மூலம் தவறான பலன்களை பெறுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். ஆவண எழுத்தரான ஜே.யூ.ராமலிங்கம் சட்டத்திற்கு புறம்பாக போர்ஜரி ஆவணங்களை உருவாக்கியதால் அவருடைய உரிமம் அரசாங்கத்தால் ரத்து செய்யப்பட்டும், அவர் மீது பல வழக்குகள் இந்நீதிமன்றத்திலும், வேறு நீதிமன்றங்களிலும் நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 14.12.2016 ல் எதிர்மனுதாரர்கள் மேற்படி பாதையின் குறுக்கே வேலி அமைத்ததாக கூறுவது பொய்யாகும். மனுதாரர்கள் கூறுவது போல் பாதை இல்லாத நிலையில் ரவுடிகளுடன் சேர்ந்து இடையூறு செய்ததாக கூறுவது பொய்யாகும்.

(ii) சர்வே எண்.226/8ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 11 சென்ட். 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தாத்தாவான பழனிசாமி செட்டியார் சர்வேஎண்.226/8 ல் 0.04 சென்டை 29.10.1942 ல் விலைக்கு வாங்கினார். மேற்படி பழனிசாமி செட்டியாருக்கு முதல் மனைவியின் மூலம் கந்தசாமி செட்டியார் என்ற மகனும், 2 வது மனைவி குஞ்சம்மாள் மூலம் ராஜமாணிக்கம் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்

பிறந்தனர். ராஜமாணிக்கம், 1ம்எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரும் ஆவார். அதே சர்வே எண்ணில் மூத்த மகனான கந்தசாமிசெட்டியார் 0.38 சென்டை பெருமாள்கவுண்டர் மற்றும் அவரது குடும்பத்தாரிடமிருந்து கிரயம் பெற்றார். மேற்படி கந்தசாமிசெட்டியார் கோவிந்தம்மாள் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார். மீண்டும் 1963 ல் கோவிந்தம்மாளிடமிருந்து கந்தசாமிசெட்டியார் கிரயம் பெற்றுக் கொண்டார். அதனை 1975 ல் நல்லம்மாள் மற்றும் நம்பெருமாள் ஆகியோருக்கு விற்பனை செய்து விட்டார்.

(iii) அதன்பின்னர் பழனிசாமி செட்டியாரின் வாரிசுகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதில் வழக்கு சொத்தான 0.04 சென்ட் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் நாகமாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்டது. கந்தசாமிசெட்டியாருக்கு சர்வேஎண். 227/1ல் 3360 சதுரடியும், மற்றொரு மகனான கோபாலகிருஷ்ணனுக்கு அதே சர்வே எண்ணில் 1560 சதுரடியும் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி நாகமாணிக்கம் வழக்கு சொத்துகளை அனுபவித்து வந்து 1996 ல் எதிர்மனுதாரர்களை வாரிசாக விட்டு இறந்து விட்டார். எதிர்மனுதாரர்கள் கூட்டுரிமையாளர்கள் என்பதால் ச.எண்.226/8 ஏ குறித்து கூட்டு பட்டா பெற்றுக் கொண்டனர். வேலையின் காரணமாகவும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் வழக்கு சொத்தினை காலியிடமாக எதிர்மனுதாரர்கள் வைத்துள்ளனர்.

(iv) எதிர்மனுதாரர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டதால் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.32/2015 தாக்கல் செய்யப்பட்டு, சமரசம் ஏற்பட்டது. மேற்படி சமரசத்தின்படிக்கு 2 ம்எதிர்மனுதாரருக்கு வீடு கட்டுவதற்காக வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டது. நஞ்சுண்டர் மற்றும் விசுவநாதன் மற்றும் அவரது குடும்பத்தினர் இடையூறு செய்ததால் அ.வ.எண்.187/2015 தாக்கல் செய்யப்பட்டு, அதில் இ.ம.எண்.790/2015 தாக்கல் செய்யப்பட்டு, முழு விசாரணைக்கு பின்னிட்டு மேற்படி மனு எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்ப்பானது. மேற்படி விசுவநாதன் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.228/2015 தாக்கல் செய்து, அதில் இ.ம.எண்.854/2015 தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பானது. அவர்களின் தூண்டுதலின் பேரில் தான் மனுதாரர்கள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் மேற்படி நபர்களின் ஆட்கள் என்பதால்

இ.ம.எண்கள். 790/2015 மற்றும் 854/2015 ல் எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் முன்தீர்ப்பு தடையால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 5 ம்எதிர்மனுதாரர்கள் கோரியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் 1 ம்மனுதாரர் ம.சா.ஆ.1 ன் மூலம் ஒரு மனையிடத்தை கிரயம் பெற்று, அதில் தார்சு வீடு கட்டினார் எனவும், அதன் கதவுஎண்.15–2–28/1 எனவும், 2 ம்மனுதாரர் ஒரு மனையிடத்தை ம.சா.ஆ.2 ன் மூலம் கிரயம் பெற்று, அதில் தார்சு வீடு கட்டினார் எனவும், அதன் கதவுஎண்.15–2–22 எனவும், 3 ம்மனுதாரர் ஒரு மனையிடத்தை ம.சா.ஆ.3 ன் மூலம் கிரயம் பெற்று, அதில் தார்சு வீடு கட்டினார் எனவும், அதன் கதவுஎண்.15–2–21 எனவும், மனுதாரர்களின் வீடுகள் ஆவடத்துார் கிராமம், சர்வே எண்கள். 226/8, 266/6, 266/2 ல் உள்ளது எனவும், 1 ம் மனுதாரர் ம.சா.ஆ.5 கணிணிசிட்டா, ம.சா.ஆ.6 வரிரசீது பெற்று அவருடைய சொத்தை அனுபவித்து வருவதாகவும், 2 ம்எதிர்மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு செலுத்திய சொத்துவரிரசீது ம.சா.ஆ.7 எனவும், 3 ம்எதிர்மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு செலுத்திய சொத்துவரிரசீது ம.சா.ஆ.8 எனவும், மாதிரி வரைபடம் ம.சா.ஆ.9 எனவும், வழக்கு சொத்தான 20 அடி ரோடு மனுதாரர்களின் கிரயப்பத்திரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மனுதாரர்களும், மனுதாரர்களுக்கு விற்பனை

செய்தவர்களும் மேற்படி ரோட்டை அனுபவித்து வந்தனர் எனவும், மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவர்கள் ம.சா.ஆ.4 ன் மூலம் தான பத்திரம் மூலம் எழுதி கொடுத்து ஒப்படைத்துவிட்டனர் எனவும், 6 ம்பிரதிவாதி மேற்படி ரோட்டை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து பராமரித்து வருகிறார் எனவும், பொதுமக்களும் மேற்படி ரோட்டை பயன்படுத்தி வருகின்றனர் எனவும், எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும், உரிமைமூலமும் இல்லை எனவும், இந்நிலையில் 08.01.2019 ல் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ரவுடிகளுடன் சேர்ந்து கொண்டு மனுதாரர்களையும், அந்த பகுதியில் உள்ளவர்களையும் வழக்கு ரோட்டை பயன்படுத்தவிடாமல் ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் குழியை தோண்டினர் எனவும், மனுதாரர்கள் அதனை தடுத்து, உள்ளூர் காவலர்கள் உதவியுடன் அதனை மூடிவிட்டனர் எனவும், ஊர்பொதுமக்கள் கொடுத்த புகார் ம.சா.ஆ.10 எனவும், மேற்படி ரோட்டை காண்பிக்கும் புகைப்படங்கள் ம.சா.ஆ.11 எனவும், இந்நிலையில் மீண்டும் 17.07.2019 ல் எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சி செய்தனர் எனவும், எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் மனையிடங்களை கிரயம் பெற்று தார்சுவீடு கட்டி அனுபவித்து வருகின்றனர் என்பது பொய் எனவும், மனு பத்தி 4 மற்றும் 5 ல் கூறியுள்ள சங்கதிகள் பொய் எனவும், மனுதாரர்கள் பெயரிலுள்ள கிரய பத்திரமும், அவர்களது முன்னவர்களின் பெயரிலுள்ள கிரய பத்திரமும் போர்ஜரியானது எனவும், மனுதாரர்களின் வீடுகள் சர்வே எண்கள்.226/2, 226/6, 226/8 ஆகியவற்றில் உள்ளது என கூறுவது பொய் எனவும், வழக்கு சொத்து ரோடு என்பதும், அதுகுறித்து கிரய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் பொய் எனவும், மனுதாரர்களும், அவர்களுக்கு விற்பனை செய்தவர்களும் மேற்படி ரோட்டை அனுபவித்து வந்தார்கள் என கூறுவது பொய் எனவும், அந்த ரோட்டை 6 ம்பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்து ஒப்படைத்து விட்டதாகவும், அது அவர்களது பராமரிப்பில் இருந்து வருவதாகவும் கூறுவது பொய் எனவும், சர்வே எண்.226/8 ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 11 சென்ட். 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தாத்தாவான பழனிசாமி செட்டியார் சர்வேஎண்.226/8 ல் 0.04 சென்டை 29.10.1942 ல் எ.ம.சா.ஆ.1 ன் மூலம்

விலைக்கு வாங்கினார் எனவும், மேற்படி பழனிசாமி செட்டியாருக்கு முதல் மனைவியின் மூலம் கந்தசாமி செட்டியார் என்ற மகனும், 2 வது மனைவி குஞ்சம்மாள் மூலம் ராஜமாணிக்கம் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பிறந்தனர் எனவும், ராஜமாணிக்கம், 1ம்எதிர்மனுதாரரின் கணவரும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் எனவும், அதே சர்வே எண்ணில் மூத்த மகனான கந்தசாமிசெட்டியார் 0.38 சென்டை பெருமாள்கவுண்டர் மற்றும் அவரது குடும்பத்தாரிடமிருந்து கிரயம் பெற்றார் எனவும், மேற்படி கந்தசாமிசெட்டியார் கோவிந்தம்மாள் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் எனவும், மீண்டும் 1963 ல் எ.ம.சா.ஆ.2 ன் மூலம் கோவிந்தம்மாளிடமிருந்து கந்தசாமிசெட்டியார் கிரயம் பெற்றுக் கொண்டார் எனவும், அதனை 1975 ல் நல்லம்மாள் மற்றும் நம்பெருமாள் ஆகியோருக்கு விற்பனை செய்து விட்டார் எனவும், அதன்பின்னர் பழனிசாமி செட்டியாரின் வாரிசுகள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதில் வழக்கு சொத்தான 0.04 செண்ட் 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் நாகமாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்டது எனவும், கந்தசாமிசெட்டியாருக்கு சர்வேஎண். 227/1ல் 3360 சதுரடியும், மற்றொரு மகனான கோபாலகிருஷ்ணனுக்கு அதே சர்வே எண்ணில் 1560 சதுரடியும் பாகமாக ஒதுக்கப்பட்டது எனவும், மேற்படி நாகமாணிக்கம் வழக்கு சொத்துகளை அனுபவித்து வந்து 1996 ல் எதிர்மனுதாரர்களை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் எனவும், எதிர்மனுதாரர்கள் கூட்டுரிமையாளர்கள் என்பதால் ச.எண்.226/8 ஏ குறித்து கூட்டு பட்டா பெற்றுக் கொண்டனர் எனவும், வேலையின் காரணமாகவும், குடும்ப சூழ்நிலை காரணமாகவும் வழக்கு சொத்தினை காலியிடமாக எதிர்மனுதாரர்கள் வைத்துள்ளனர் எனவும், எதிர்மனுதாரர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டதால் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.32/2015 தாக்கல் செய்யப்பட்டு, சமரசம் ஏற்பட்டது எனவும், மேற்படி சமரசத்தின்படிக்கு 2ம்எதிர்மனுதாருக்கு வீடு கட்டுவதற்காக வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டது எனவும், நஞ்சுண்டர் மற்றும் விசுவநாதன் மற்றும் அவரது குடும்பத்தினர் இடையூறு செய்ததால் அ.வ.எண்.187/2015 தாக்கல் செய்யப்பட்டு, அதில் இ.ம.எண்.790/2015 தாக்கல் செய்யப்பட்டு, முழு விசாரணைக்கு பின்னிட்டு மேற்படி மனு எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்ப்பானது எனவும், அதன் உத்தரவின் நகல் எ.ம.சா.ஆ.6 எனவும், மேற்படி விசுவநாதன் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அ.வ.எண்.228/2015 தாக்கல் செய்து, அதில்

இ.ம.எண்.854/2015 தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பானது எனவும், அதன் உத்தரவின் நகல் எ.ம.சா.ஆ.7 எனவும், அவர்களின் தூண்டுதலின் பேரில் தான் மனுதாரர்கள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் எனவும், மனுதாரர்கள் மேற்படி நபர்களின் ஆட்கள் என்பதால் இ.ம.எண்கள். 790/2015 மற்றும் 854/2015 ல் எதிர்மனுதாரர்களுக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் முன்தீர்ப்பு தடையால் இம்மனு பாதிக்கப்பட்டுள்ளது எனவும், செயல் அலுவலரால் பாதை போடப்படவில்லை என எ.ம.சா.ஆ.8 ன் மூலம் பதில் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், கூட்டுப்பட்டா எ.ம.சா.ஆ.9 எனவும், மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) எ.ம.சா.ஆ.6 மற்றும் எ.ம.சா.ஆ.7 உத்தரவுகளை பரிசீலனை செய்ததில் அந்த வழக்கில் இந்த மனுதாரர்கள் தரப்பினர் இல்லை என்பதால் மேற்படி மனுவில் ஏற்பட்டுள்ள உத்தரவு இம்மனுதாரர்களை கட்டுப்படுத்தாது எனவும், இம்மனு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்படவில்லை எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) எதிர்மனுதாரர்கள் தரப்பில் பழனிசாமி செட்டியாரின் வாரிசுகளுக்கிடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது எனவும், அதில் வழக்கு சொத்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான நாகமாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்டது என கட்சி செய்தபோதும், அதனை உறுதிப்படுத்துவதற்காக நாகமாணிக்கத்தின் பெயரிலுள்ள தனிப்பட்ட எந்தவொரு ஆவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. இந்நிலையில் மேற்படி நாகமாணிக்கம் 1996 ல் இறந்ததற்கு பின்னிட்டு, எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வந்ததாகவும், எதிர்மனுதாரர்களுக்கு இடையே பாகப்பிரிவினை வழக்கு மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதில் ஏற்பட்ட சமரசத்தின்படிக்கு வழக்கு சொத்து 2 ம்எதிர்மனுதாருக்கு ஒதுக்கப்பட்டது என கட்சி செய்தபோதும், மேற்படி அ.வ.எண்.32/2015 ன் தீர்ப்பு நகலை எதிர்மனுதாரர்கள் ஒப்படைக்கவில்லை. ஆகவே எதிர்மனுதாரர்களின் கட்சி இம்மனுவை பொறுத்தவரை ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு எழுதிக் கொடுத்தவர்கள் போர்ஜரியான ஆவணத்தை உருவாக்கியுள்ளனர் எனவும், அவர்களுக்கு எழுதிக் கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என கட்சி செய்தபோதும், போர்ஜரியான ஆவணம் என்பதற்கு எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தாத நிலையில் அதுகுறித்து இருதரப்பினரும் சாட்சிகள் முன்னிலைப்படுத்தியதற்கு பின்பு அசல் வழக்கில் தான் தீர்மானிக்க முடியும். ஆகவே மேற்படி கட்சியும் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் மனையிடங்களை கிரயம் பெற்றதும், வீடு கட்டியுள்ளதும் பொய், சர்வே எண்கள். 226/2, 226/6, 226/8 ஆகியவற்றில் வீடு இல்லை என கட்சி செய்தபோதும், மனுதாரர்கள் கிரயம் பெற்றுள்ள கிரய பத்திரங்கள் ம.சா.ஆ.1 முதல் 3 வரை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் சர்வே எண்கள்.226/8, 226/6, 226/2 என குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் மனுதாரர்கள் பெயரிலுள்ள சொத்துவரி ரசீதுகளான ம.சா.ஆ.6 முதல் 8 வரையிலான சான்றாவணங்களிலிருந்து அவர்கள் கிரயம் பெற்ற சொத்தில் வீடு கட்டியுள்ளதும், அதற்கு வரி விதிப்பு ஏற்பட்டுள்ளதும் தெரியவருகிறது. ஆகவே மேற்படி ஆவணங்களிலிருந்து மனுதாரர்கள் வீடு கட்டியுள்ளார்கள் என இம்மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்படுகிறது.

(vii) ம.சா.ஆ.4 லிருந்து மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவர்கள் வழக்கு சர்வே எண் உட்பட மற்ற சர்வே எண்களை 6ம்பிரதிவாதிக்கு ரோடு வசதிக்காகவும், சாக்கடை குடிநீர் பைப்புகள் பொருத்துவதற்காகவும் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் கூறுவது போல் ரோடு இல்லை எனவும், அது 6ம்பிரதிவாதிக்கு ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் பராமரிக்கவில்லை என கட்சி செய்துள்ளனர். எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.8 தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழான மனு மற்றும் அதற்கான பதிலை பரிசீலனை செய்ததில் வழக்கு சொத்துள்ள சர்வே எண்ணில் சாலை 6ம்பிரதிவாதியால் அமைக்கப்படவில்லை என பதில் கொடுத்துள்ளனர். மேற்படி பதிலிலிருந்து 6ம்பிரதிவாதியால் வழக்கு சொத்தில் பாதை

ஏற்படுத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் மனுதாரர்களது தரப்பு புகைப்படமான ம.சா.ஆ.11 லிருந்தே தார்சாலை எதுவும் போடப்படாதது தெரியவருகிறது. எனவே இம்மனுவை பொறுத்தவரை 6 ம்பிரதிவாதியால் ச.எண்.226/8 ல் பாதை ஏற்படுத்தவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(viii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கு சொத்தான பாதை இல்லை என கட்சி செய்தபோதும், அதற்கான எந்தவொரு சான்றாவணத்தையும் முன்னிலைப் படுத்தவில்லை. இந்நிலையில் ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் ம.சா.ஆ.1 30.10.1996 லும், ம.சா.ஆ.2 16.06.1988 லும், ம.சா.ஆ.3 22.09.2004 லும் இவ்வழக்கு ஏற்படுவதற்கு பல வருடங்களுக்கு முன்பே ஏற்பட்டுள்ளதும், அதில் வழக்கு சொத்து பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும் அதனை ம.சா.ஆ.11 புகைப்படமும் உறுதி செய்கின்றது. ஆகவே எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாதை இல்லை என்பதற்கு சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தாததாலும், ம.சா.ஆ.1 முதல் 3 மற்றும் ம.சா.ஆ.11 புகைப்படங்களின் மூலம் பாதை உள்ளது தெரிய வருவதால் இம்மனுவை பொறுத்தவரை வழக்கு சொத்து பாதை உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே ம.சா.ஆ.1 முதல் 3 மற்றும் ம.சா.ஆ.11 புகைப்படத்திலிருந்து மனுதாரர்களின் வழக்கில் முகநோக்கு வழக்கு உள்ளதும், சட்ட சமவாய்ப்பு மனுதாரர்களுக்கு உள்ளதும் தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பாதை வழியாக மட்டும் தான் மனுதாரர்கள் தங்களுடைய சொத்திற்கு செல்ல முடியும் என கட்சி செய்துள்ளநிலையில் அதனை எதிர்மனுதாரர்கள் மறுத்தபோதும், மனுதாரர்கள் தங்களுடைய சொத்திற்கு செல்வதற்கு வேறு பாதை வசதி உள்ளது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கட்சி செய்யப்படவில்லை. ஆகவே மேற்படி பாதையை மனுதாரர்கள் பயன்படுத்துவதை தடுப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் பாதிப்பை விட மனுதாரர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்பது தெரியவருகிறது.

(ix) சர்வே எண்.226/8 ல் 1.11 ஏக்கர் உள்ளநிலையில் மனுதாரர்கள் அதன் ஒரு பகுதியை கிரயம் பெற்றதாக ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாலும், ஒரு பகுதி எதிர்மனுதாரர்களின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது

என எ.ம.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளதாலும், தற்போது 2ம்எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்துள்ளதாலும், மனுதாரர்களுக்கு எழுதிக் கொடுத்த நபர்களுக்கு உரிமையில்லை என எதிர்மனுதாரர்களால் கட்சி செய்யப்படுவதாலும், அதுகுறித்து அசல் வழக்கில் தீர்மானிக்க வேண்டியுள்ளதாலும், வழக்கு பாதையை தவிர வேறு பாதை இல்லை என மனுதாரர்கள் கட்சி செய்ததாலும், வழக்கு பாதையை உள்ளது உள்ளபடியே வைத்திருக்க வேண்டுமென உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என்பதால் இருதரப்பினரும் வழக்கு பாதையை உள்ளது உள்ளபடியே வைத்திருக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

(x) இம்மனுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளவைகள் அனைத்தும் இம்மனுவை பொறுத்த முடிவுகள் தான். இவைகள் இந்த வழக்கின் விசாரணைக்கு பொருந்தாது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக வழக்கு சொத்தான பாதையை இருதரப்பினரும் இவ்வழக்கு முடியும் வரை உள்ளது உள்ளபடியே (Status Quo) வைத்திருக்க வேண்டுமெனவும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 05 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :– இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

ம.சா.ஆ.1 30.10.1996 தர்மலிங்கம் மற்றும் வையாபுரி ஆகியோர்
1ம்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்டநகல்

ம.சா.ஆ.2 16.06.1988 கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் ராமலிங்கம்
ஆகியோர் 2 ம்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்டநகல்

ம.சா.ஆ.3 22.09.2004 யுவராஜ் 3 ம்மனுதாரருக்கு எழுதிக்
கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்டநகல்

ம.சா.ஆ.4 03.01.2008 6 ம்பிரதிவாதிக்கு ஜே.யூ.ராமலிங்கம் எழுதிக்
கொடுத்த தானப்பத்திரம் சான்றிட்டநகல்

ம.சா.ஆ.5 29.02.2016 1 ம்மனுதாரர் பெயரிலுள்ள கணிணிபட்டா கணிணிநகல்

ம.சா.ஆ.6 2015–2016 1 ம்மனுதாரர் பெயரிலுள்ள சொத்துவரிரசீது அசல்

ம.சா.ஆ.7 2005–2006 2 ம்மனுதாரர் பெயரிலுள்ள சொத்துவரிரசீது அசல்

ம.சா.ஆ.8 2013–2014 3 ம்மனுதாரர் பெயரிலுள்ள சொத்துவரிரசீது அசல்

ம.சா.ஆ.9 03.03.2016 மாதிரிவரைபடம் அசல்

ம.சா.ஆ.10 29.02.2016 ஜலகண்டாபுரம் ஊர்பொதுமக்கள் மாவட்ட
ஆட்சியரிடம் அளித்த மனு அலுவலகநகல்

ம.சா.ஆ.11 புகைப்படங்கள் (4 எண்ணிக்கை), குறுந்தகடு (1) அசல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :– </u>இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–</u>

எ.ம.சா.ஆ.1 29.10.1942 செங்கோட கவுண்டர் தனக்காகவும், தன் மைனர்
குமாரர் செங்கோடகவுண்டருக்கு கார்டியனாகவும் இருந்து
பழனிசாமி பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்டநகல்

எ.ம.சா.ஆ.2 23.03.1963 செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்டநகல்

எ.ம.சா.ஆ.3 25.08.1986 பெருமாள்கவுண்டர், அவரது மனைவி
நல்லம்மாள், அவர்களது மகன் வெங்கடாசலம் ஆகியோர்கள்
ஜே.யூ.ராமலிங்கத்திற்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்டநகல்

எ.ம.சா.ஆ.4 25.08.1986 பெருமாள்கவுண்டர், அவரது மனைவி நல்லம்மாள்,
அவர்களது மகன் வெங்கடாசலம் ஆகியோர்கள் சரோஜினிக்கு
எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் சான்றிட்டநகல்

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.5 | 12.06.2015 அ.வ.எண்.339/2004 ன் தீர்ப்பாணை | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.6 | 22.12.2015 அ.வ.எண்.187/2015 ல் இ.ம.எண்.790/2015 ன் உத்தரவு மற்றும் தீர்ப்பாணை | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.7 | 22.12.2015 அ.வ.எண்.228/2015 ல் இ.ம.எண்.854/2015 ன் உத்தரவு மற்றும் தீர்ப்பாணை | அலுவலகநகல் |
| எ.ம.சா.ஆ.8 | 31.03.2016 2 ம்எதிர்மனுதாரர் பொது தகவல் அலுவலருக்கு வழங்கிய விண்ணப்பம் மற்றும் | நகல் |
| | 24.06.2016 செயல் அலுவலர் 2 ம்எதிர்மனுதாரருக்கு அனுப்பிய பதில்கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.9 | 12.11.2019 கணிணிபட்டா | கணிணிநகல் |
| எ.ம.சா.ஆ.10 | 16.02.1975 நல்லம்மாள் பெயரிலுள்ள கிரயப்பத்திரம் | பதிவுநகல் |

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.